சுருக்கம்

கருணை அடிப்படையில் பணி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருமதி.T.விஜயா, (க/பெ(லேட்) திரு.எஸ்.தங்கமணி ராஜா) இளநிலை உதவியாளர், பதவியின் பணிநியமனம் – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எம்2) துறை</u>

அரசாணை (2டி) எண். 66

நாள்: 09.04.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
ஹேவிளம்பி, பங்குனி – 26

<u>படிக்கப்பட்டது</u>

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்) துறை, நாள்: 01.08.2018
2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ) இயக்குநரின் கடித எண்.18039/ தொ.அ/அ1/1/2012, நாள்: 10.09.2018

******

<u>ஆணை:</u>

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ இயக்குநரின் கடிதத்தில், திருவள்ளூர், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் மருந்தாளுநராக பணியாற்றிக் கொண்டிருந்தபோது திரு.எஸ்.தங்கமணி ராஜா, என்பவர் 12.01.2011 அன்று பணியின் மரணமடைந்துவிட்டார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்றவர் என்று அவரின் பிறந்த தேதி 04.03.1972 என்றும், அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.03.2030 என்று குறிப்பிட்டு, இறந்த அரசு ஊழியரின் மனைவி திருமதி.T.விஜயா, என்பவர் தனக்கு பணிநியம வேண்டி 04.08.2011 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும், தனியர் பிறந்த தேதி 05.06.1976 என்று திருமதி.T.விஜயா என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநி உதவியாளராகப் பணி நியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்த தனியரைத் தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநி உதவியாளராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந் பெரம்பூர்–I அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 04.08.2016 முற்பகல் பணியில் சேர்ந்துள் என்றும் குறிப்பிட்டு, தனியர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 04.08. முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ள

2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ) இயக்குநரின் கருத்துருவை பரிசீலித்து, அதனை ஏற்று திருமதி.T.விஜயா, இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 04.08.2016 முற்பகல் முதல் அவர் அப்பணி தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து

Attested
21/6/22

-2-

ஆணையிடப்படுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.22486/ அ1/2018-1, நாள்:11.03.2019 (ம) பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.8685/ஜி2/2019, நாள்:19.03.2019-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர்(தொ.அ), சென்னை – 600 006.
திருமதி T.விஜயா, இளநிலை உதவியாளர் (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை – 600 018.

நகல்:-
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, சென்னை – 600 009.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை – 600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (குகவுப் பிரிவு) துறை, சென்னை – 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

/ஆ: இர்...
பிரிவு அலுவலர்